
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1144**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

**152**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எம்.சென்னகேசவன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# “தம்பி சென்னகேசவன், தங்க குணமுடையான்!”

ஓவியம் : ரவி பேலட்



1978-ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளில், அண்ணா அறிவாலயத்துக்கு அருகில் அண்ணாவுக்கு சிலை வைக்க விரும்பினார் கலைஞர். மிசாவில் துவண்டிருந்த கழகத்தினரை, சிலை திறப்பு விழாவுக்கு சென்னைக்கு அழைக்கத் திட்டமிட்டார். ஆனால், அதற்கு இடம் ஒதுக்காமல் காலந்தாழ்த்தி, திடீரென வள்ளுவர் கோட்டம் அருகில் சிலையை அமைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தனர். அதையடுத்து, அண்ணா சிலையைச் சிறப்புடன் அமைக்க, இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு அடிப்பீடம் அமைத்திட வேண்டும் என விரும்பி, சேலம் சேர்வராயன் மலைத்தொடரில் அத்தகைய அரிதான கல் இருப்பதை அறிந்து, அதைக் கொண்டுவரச் செய்தார். அந்தக் கல்லை பீடமாகக் கொண்டுதான், அவசர அவசரமாக அண்ணா சிலை அமைக்கப்பட்டது.

அந்த சிறப்புமிக்க கல்லை, கலைஞரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததும், கல்லைப் பெயர்த்து சென்னைக்குக் கொண்டுவந்து சேர்த்ததும் அவரது அன்பு உடன்பிறப்புகளில் ஒருவர், அன்றைய ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டச் செயலாளர் சென்னகேசவன்.

“கல்லை நமது முகம் பார்க்கும் கண்ணாடி போல மெருகேற்றியுள்ள புதுமையே புதுமை! அந்த பீடத்திலே வள்ளுவர் கோட்டத்து முகப்பினைக் கண்டு மகிழலாம்” எனக் கலைஞரின் உள்ளம் பூரிக்கவைத்தார் அந்த உடன்பிறப்பு. “அடடா! அந்த அழகு சிந்தும் பீடம்! சென்னகேசவனை நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது” எனத் திறப்புவிழா அழைப்புக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு பெருமைப்படுத்தினார் கலைஞர்.

‘நெஞ்சுக்கு நீதியில்’ கலைஞரின் வரலாற்றில் இடம்பெற்ற அந்த உடன்பிறப்பு, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், இனாம் காட்டுப்பட்டி என்கிற கிராமத்தில், 1942-ஆம் ஆண்டு, ஜனவரி 15-ஆம் தேதி பிறந்தவர்.

கல்லாவியில் உயர்நிலைப் பள்ளி வரை படித்து, 20 வயதில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பள்ளிக் காலத்திலேயே அரசியல் ஈடுபாடு ஏற்பட, ஆசிரியர் பணிக்காலத்தில் கழகத் தோழர்களோடு இணைந்து போராட்டங்களில் கலந்துகொள்ளத் தொடங்கினார். குறிப்பாக, 1958-ஆம் ஆண்டு, சேலம் மாவட்டக் கழக மாநாட்டில், தலைவர்களின் உரைகளைக் கேட்பதற்காக 16 வயதிலேயே சென்றுள்ளார். அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட முன்னோடிகள் ஜி.பி.சோமசுந்தரம், சித்தையன் ஆகியோரிடத்தில் அரசியல் பயின்றவர் சென்னகேசவன்.

### ஆசிரியப் பணி துறப்பு

1964-ஆம் ஆண்டிலிருந்து தீவிர அரசியலில் ஈடுபடலானார். அந்த ஆண்டு, இந்தித் திணிப்பு எதிர்ப்பு அறப்போராட்டமாக பேரறிஞர் அண்ணா அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில், ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் 10 இடங்களில் போராட்ட முனை அறிவிக்கப்பட்டது. அவற்றில், தருமபுரியில் முதற்கட்டப் போராளியாகக் கலந்துகொண்டு, சட்டநகலுக்குத் தீமூட்டி கைதானவர் சென்னகேசவன். வேலூர் மத்திய சிறையில் மூன்று மாதங்கள் அடைக்கப்பட்டிருந்தார். அதன் காரணமாக, அவரது ஆசிரியப் பணியும் பறிபோனது. அந்த நடவடிக்கையை எதிர்பார்த்திருந்தவர்போல, அப்போது முதல் அன்றைய ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் தீவிரமாகக் களப்பணியில் இறங்கினார்.

சேலம் மாவட்டத்தைப் பிரித்து தருமபுரி மாவட்டம் உருவாக்க வேண்டும் எனக் கழகத்தின் கோரிக்கைக்கு வலிமை சேர்க்கும் வகையில், நடைபெற்ற போராட்டங்களில் முன்னிலை வகித்தவர் சென்னகேசவன். 1967-ஆம் ஆண்டில், மாவட்டக் கழகப் பணிகளில் முன்னணியாளராகத் திகழ்ந்தார். அந்த வேகம்தான் 1970-ஆம் ஆண்டில், தருமபுரி மாவட்டக் கழகப் பொறுப்பாளராக சென்னகேசவனை நியமிக்கும் அளவுக்குக் கொண்டுசென்றது. அவர் மாவட்டக் கழகப் பொறுப்பாளரானபோது அவருக்கு வயது 28 தான். அதன்பின்னர், இரண்டு ஆண்டுகள் கழித்து, 1976-ஆம் ஆண்டு, மாவட்டச் செயலாளராகக் கழக அமைப்புத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 1984-ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் இருந்தார். அந்த அளவுக்கு கழகத்தினர் மத்தியில் செல்வாக்கு கொண்டவராக இருந்தார்.

### தருமபுரி கழகக் கோட்டை

வளர்ச்சியில் பின்தங்கிய, வறட்சி மாவட்டமாக அறியப்பட்ட அன்றைய தருமபுரி மாவட்டத்தில், அவர் அரசியல் வீச்சோடு செயல்பட்ட காலங்களில், அங்கு காங்கிரஸ் செல்வாக்குடன் இருந்தது. மேலும், இடதுசாரி அரசியல் எழுச்சி பெற்றிருந்த காலமாகும். அப்படியான காலத்தில் சென்னகேசவன் செயல்பட்ட விதம், மக்களை தி.மு.க. அரசியல் பக்கம் நம்பிக்கை கொள்ள வைத்தது எனலாம். அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களிலும் அங்கு கழகமே வெற்றிக்கொடி நாட்டியது. “தருமபுரி மாவட்டத்தை கழகக் கோட்டையாக மாற்றிய தங்க குணமுடையான்” என அவரது உழைப்பைக் குறிப்பிட்டுள்ளார் கலைஞர்.

இரண்டாவது முறையாக அவர் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, காவேரிப்பட்டினத்தில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அதில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு, சென்னகேசவனுக்கு மக்களின் சார்பாக, இளைஞர் அணியின் சார்பாக மலர்க்கிரீடம் அணிவித்து சிறப்பு செய்துள்ளார்.

பேரறிஞர் அண்ணாவிடத்தில் நம்பிக்கை பெற்றதுபோல, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பையும் நம்பிக்கையையும் பெற்றவர், அடுத்தடுத்த வாய்ப்புகளில் உயர வேண்டிய நிலையில், எதிர்பாராத வகையில் 1984-ஆம் ஆண்டு, சாலை விபத்தில் சிக்கி, சிகிச்சை பலனின்றி ஆகஸ்ட் மாதம் 14-ஆம் தேதி இறப்பெய்தினார். அதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான், கழக நிகழ்ச்சிகளுக்கு கலைஞரிடம் தேதி வாங்கிச் சென்றிருந்தார்.

### இப்படி ஒரு முடிவா?

42 வயதில் நிகழ்ந்த அவரது மரணம் தாளாது, “இந்த வயதில் இப்படியொரு முடிவா? அய்யகோ என் இதயத்தை சம்மட்டியால் நொறுக்கும் செய்தி வந்துவிட்டதே, உள்ளம் துளைக்கப்பட்டுவிட்டதே சென்னகேசவா” எனக் கலைஞரின் இரங்கல் அனைவரின் இதயத்தையும் பிழிந்தது.

கலைஞர், பேராசிரியர், ஆற்காட்டார் என கழகத்தின் அனைத்துத் தலைவர்களும் தருமபுரிக்கு விரைந்தனர். காட்டுப்பட்டியில் சென்னகேசவனின் உடல், கலைஞரின் இரங்கல் உரையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டபோது, கழகத்தின் கொடிக்கம்பம் அரைக் கம்பமாக இறங்கி கண்ணீர் சிந்தியது.

அவர் மறைந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னர், ஊர் மக்களால் அவர் சிலை நிறுவப்பட்டபோது, பேராசிரியர் அவர்கள் திறந்துவைத்து உரையாற்றினார். இன்றும் அவர் நினைவுநாளில் மாவட்டக் கழகத்தினர் திரண்டு வந்து மரியாதை செய்கின்றனர். அங்கு மட்டுமல்ல, அண்ணா சிலை நிலைத்திருக்கும் நாள்வரை, சென்னகேசவன் கொணர்ந்த பீடமும் அவரை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

> “அண்ணா சிலை நிலைத்திருக்கும் நாள்வரை, சென்னகேசவன் கொணர்ந்த பீடமும் அவரை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.”

...துடிக்கும்

## வளர்ந்த நாடுகளுக்கு நிகரானது தமிழ்நாடு!

அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் ‘State of Working India 2026’ ஆய்வறிக்கை, சமீபத்தில் வெளியாகியுள்ளது. அந்த ஆய்வறிக்கையில், தமிழ்நாட்டைப் பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ள கருத்துகள் யாவும், திராவிட மாடல் ஆட்சியின் 5 ஆண்டுகள் மகத்தான சாதனைகளுக்கு மகுடம் சூட்டுகின்றன.

இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள அகிலன் கார்த்திகேயன் என்பவர், “இந்தியாவின் சராசரி வயது 29, பீகாரின் சராசரி வயது 22. ஆனால், தமிழ்நாட்டின் சராசரி வயது 35. அதாவது, வட மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து, நடுத்தர வயதுடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு வெறும் பொருளாதார வளர்ச்சியை மட்டும் அடையாமல், அதை நிலையான சம்பளத்துடன்கூடிய வேலைகளாக (Regular Salaried Jobs) மாற்றியுள்ளது.

வருமானம் உயர உயர (1983-இல் இருந்து சுமார் 8 மடங்கு), இங்கே சம்பளத்திற்கு வேலைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது (சுமார் 2 மடங்கு). குறிப்பாக, இளம் பெண்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகளை வழங்குவதில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தவர்கள் அதிகம் இருப்பதாலும், தொழில்துறை வளர்ச்சி அடைந்திருப்பதாலும், ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இதனால் பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இருந்து தொழிலாளர்களை ஈர்க்கும் ஒரு முக்கிய மையமாக (Net Receiver) தமிழ்நாடு மாறியுள்ளது. தமிழ்நாடு ஒரு வளர்ந்த நாட்டைப் போன்ற நிலையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் அதிக வேலைவாய்ப்புகள் காரணமாக, மற்ற மாநிலத் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் மாநிலமாக உயர்ந்துள்ளது” என்று அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழக அறிக்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### ‘கலைஞர் 90’ ஆசானுடனும் மாணவருடனும்...



கோவி.லெனின்

2013-ஆம் ஆண்டில், ‘கலைஞர் 90’ என்று கலைஞரின் 90-வது பிறந்தநாளில் 90 கவிஞர்கள், கலைஞருடன் சந்திக்கும் நிகழ்ச்சியை கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஏற்பாடு செய்தபோது எடுத்த படம். கவிப்பேரரசு வைரமுத்து எவ்வளவோ உயரங்களுக்குச் சென்றபோதும், தன்னுடைய ஆசான் கலைஞர்தான் என்பதை எல்லா தருணங்களிலும் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். ‘ஞானபீட விருது’ என்கிற சிறப்பைவிட, கலைஞரின் மாணவர் என்கிற கவிப்பேரரசின் உறுதித்தன்மையே பெரும் சிறப்பு.

**– கோவி.லெனின், பத்திரிகையாளர், கழக ஐ.டி.விங் ஆலோசகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 1996 வெற்றி!

1996-ஆம் ஆண்டு, ஏப்ரல் 27 மற்றும் மே 2 ஆகிய நாட்களில் தமிழ்நாட்டில் சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் சேர்த்து தேர்தல் நடைபெற்றது. கழகம் 173 இடங்களில் வென்று, தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணியே கைப்பற்றியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.